பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 31 புதன்கிழமை 15.07.2020 கதிர் 248

### இது ரகசியம் அல்ல!


தேர்தல் வந்ததும் பலருக்கும் ஞானம் பிறந்து விடுகின்றது போலும்.

முன்னாள் விடுதலைப் புலிகளை ஒன்றிணைத்துக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கப் போகிறார் எனக் கூறியிருக்கும் ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்குக் காலம் பிந்திய ஞானமாக இது தோற்றியிருப்பது நளினத்துக்குரியது.

2

# தீர்வைத் தருவது அரசின் கடமை: அதற்காக அடிபணியமாட்டோம்!

## தமிழர்களின் பக்கம் சர்வதேசம்; திருமலையில் சம்பந்தன் சூளுரை



“தமிழர்கள் இந்த நாட்டின் பிரஜைகள். எனவே, தமிழர்களுக்கான உரிமைகளை, அரசியல் தீர்வை அரசு வழங்கியே ஆக வேண்டும். அது அரசின் கடமையாகும். அதற்காக அரசிடம் நாம் அடிபணியமாட்டோம்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

2

## 13 ஆவது திருத்தத்தை நீக்க இடம் கொடேன்!

### வாசுதேவ திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 15

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும் அதனூடாக அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்தோடு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து

2

## மாணவிகளுக்கு தொற்று இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 15

கிளிநொச்சி பொறியியல் பீட மாணவி மற்றும் கைதடி சித்த மருத்துவ மாணவி ஆகியோருக்கு கொரோனோ தொற்றில்லை என்று பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொறியியல் பீட மாணவியின் சகோதரனுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து கிளிநொச்சி வளாகம் முடக்கப்பட்டது.

2

## ஆட்சியை மாற்றியே சம்பூரை மீட்டோம்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

அனல் மின் நிலையம் என்ற போர்வையில் கபளீகரம் செய்திருந்தபோது எமது மக்கள் வழங்கிய ஓர் ஆணையின் அடிப்படையில் ஆட்சி மாற்றத்தை செய்ததன் மூலம் சம்பூர் மண்ணை மீட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சம்பூரில் நடைபெற்ற கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

2

## சிறிதரனுக்கு எதிராக செலஸ்ரின் முறைப்பாடு

2004 இல் தேர்தல் முறைகேட்டில் ஈடுபட்டார் எனக் கூட்டமைப்பின் வேட்பாளர் சிவஞானம் சிறிதரனுக்கு எதிராகச் சட்டத்தரணி செலஸ்ரின் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

2

## மக்களே மிக அவதானம்; காத்திருக்கிறது ஆபத்து!

### சமூகத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் எச்சரிக்கை விடுத்தார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஜூலை 15

நாட்டில் அடுத்து வரும் சில நாட்களில் சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் கண்டறியப்படும் ஆபத்து இருக்கின்றது. இதனால், கொரோனா வைரஸில் இருந்து பாதுகாத்துக்கொள்ள வழங்கப்பட்டுள்ள

2

## நேற்றும் 19 பேருக்கு தொற்று உறுதியானது!

கொழும்பு, ஜூலை 15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் நேற்றும் மேலும் 19 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தை சேர்ந்தவர்களுடன் தொடர்புகளை வைத்திருந்த மேலும் ஒரு நபருக்கும் ஓமானில் இருந்து வருகை தந்த ஒருவருக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து வருகை தந்த இருவருக்கும் என 4 பேருக்கு நேற்று இரவு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக அரச தகவல்

2

## உரிய திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துங்கள்!

### தயாசிறி ஜயசேகர கோரிக்கை



உரிய திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று கோரிக்கை விடுத்தார்.

18ஆம், 19ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு நிறைவு பெறுமாக இருந்தால், 25ஆம் திகதிக்கு முன்னர்

2






## மக்களே மிக அவதானம்; ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதுகாப்பு ஆலோசனைகளை அப்படியே பின்பற்றுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வாரம் மிக முக்கியமானது. கொரோனா வைரஸ் தொற்று இருப்பதை அறியாமல் கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரில் சிலர் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்றுள்ளனர். கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டதும் நாங்கள் அனைவரையும் மீண்டும் உள்ளே அழைத்துக் கொண்டோம். எனினும், அவர்கள் சமூகத்தில் நடமாடிய இடங்கள் உள்ளன. இதனால், கொரோனா சமூகத்துக்குள் செல்லாது என்று எவராலும் கூற முடியாது.

அனைவரும் மிகவும் அர்ப்பணிப்புடன் பாதுகாத்துக்கொண்ட இந்த நிலைமையைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள அனைவரும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியமானது.

அடுத்த நான்கு, ஐந்து நாள்களில் ஏதோ ஓர் ஆபத்து இருக்கின்றது. முகக் கவசங்களை அணியுங்கள், உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். தொற்றுக்குள்ளாகி மற்றுமொருவரைத் தொற்றுக்குள்ளாக்காதீர்கள் என மக்களிடம் கோரிக்கை விடுகின்றோம் - என்றார்.

## நேற்றும் 19 பேருக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் உள்ள கண்டி குண்டகசாலை பகுதியைச் சேர்ந்த இருவர், சேனாபுர புனர்வாழ்வு மத்திய நிலையத்தைச் சேர்ந்த மேலும் 4 பேர், கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தை சேர்ந்தவர்களுடன் தொடர்புகளை வைத்திருந்த மேலும் 4 பேர் மற்றும் இராஜாங்கனை மற்றும் பொலன்னறுவை லங்காபுர பிரதேசங்களைச் சேர்ந்த மேலும் இருவர் என கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்துடன் தொடர்புடைய 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அத்துடன் ஓமான் நாட்டில் இருந்து நாடு திரும்பியவர்களில் மேலும் 3 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. இதையடுத்து இலங்கையில் கொரோனா தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 2,665 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் இதுவரை 1,988 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது, 658 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வரும் நிலையில் இதுவரை 11 கொரோனா நோயாளர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்சியை மாற்றியே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவரும் வேட்பாளருமான க.குகதாசன் மற்றும் வேட்பாளர்களான கந்தசாமி ஜீவரூபன், செல்வராஜா பிரேமரதன், இரா.சச்சிதானந்தம், சுலோசனா ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மூதூர் பிரதேசசபையின் சம்பூர் வட்டார உறுப்பினர் ஜெகன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில் -

சம்பூர் காணிகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனையின் சகோதரருக்கு வழங்கப்பட்டு கொரிய கம்பனி ஒன்றிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

அப்போது அவரால் இக்காணிகளை சுவீகரிப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியை எமது மக்களின் முழுமையான ஆதரவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இரத்துச் செய்ய வைத்து இந்த சம்பூர் மண்ணை மீண்டும் இந்தக் கிராம பூர்வீக மக்களுக்கே கையளிக்க வழி வகுத்தோம்.

இவ்வாறு மக்கள் ஒரு மித்து ஒற்றுமையாக நின்று ஓரணியில் தமது வாக்குப் பலத்தை நிரூபித்தால் எமது இனப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும். இம்முறை இடம்பெறவுள்ள நாடாளுமன்றத்தில் வடகிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 20 நாடாளுமன்ற உறுப்பினர்களை வெற்றி கொள்வதன் மூலம் நாம் பலமான ஒரு சக்தியாக நாடாளுமன்றத்தில் எமது மக்களின் உரிமையைப் பெற முடியும். அத்துடன் தடைபட்டுள்ள புதிய அரசமைப்பையும் நிறைவேற்றி எமது உரிமையை அடைய முடியும்.

சிறிய கட்சிகளுக்கு உங்கள் வாக்குகளை அழிப்பதன் மூலம் அவர்களால் வெற்றி பெற முடியாது. அவ்வாறு அழிக்கப்படும் வாக்குகள் வீணாக பயனற்றதாகவே போகும் இவ்வாறானவர்கள் அரசாங்கத்தால் திட்டமிட்டு எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு களமிறக்கப்பட்டவர்கள். எனவே உங்களுடைய வாக்கைச் சிந்தித்து

## உரிய திகதிக்கு முன்னர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தலை நடத்துமாறு அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் பிரச்சினை அதிகரிக்கின்றது. நாம் கூட்டங்களுக்குச் செல்கின்றோம். மக்கள் கூட்டங்களுக்கு வருகின்றனர். நாம் மக்களுடன் நடமாடுகின்றோம். வேட்பாளர்களில் ஒருவர் அல்லது இருவருக்கு தொற்று ஏற்பட்டால், ஆயிரக்கணக்கானவர்களைத் தனிமைப்படுத்த வேண்டி ஏற்படும். அதன் போது, தேர்தல் அல்ல எதனையும் செய்ய முடியாமல் போகும். எனவே, நான் யோசனையொன்றை முன்வைக்கின்றேன். வர்த்தமானியை மாற்றியமைத்து 25 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துங்கள் என அவர் கோரியுள்ளார்.

## சிறிதரனுக்கு எதிராக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், கடந்த 2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தான் 75 கள்ள வாக்குகளை கட்சிக்கு அளித்தேன் என அண்மையில் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக பல்வேறு சர்ச்சைகள் உருவாகிய நிலையில் சிறிலங்கா சுதந்திர கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரும் சட்டத்தரணியுமாகிய எஸ். செலஸ்ரின், யாழ் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம் சிறீதரனுக்கு எதிரான குற்றச்சாட்டைப் பதிவு செய்திருந்தார்.

இந்தநிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, இந்த விடயம் தொடர்பாக தேர்தல் முறைகேடு நடந்துள்ளதாக தெரிவித்தால் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார். இதனையடுத்து நேற்று சட்டத்தரணி செலஸ்ரின் சிறீதரன் வசிக்கும் பிரிவு பொலிஸ் நிலையமான கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

## தீர்வைத் தருவது அரசின் கடமை; ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேசசமூகம் இன்று தமிழர்களின் பக்கமே நிற்கின்றது. எங்கள் நியாயமான கோரிக்கைகளை சர்வதேச சமூகம் ஏற்றபடியால்தான் அது எங்கள் பக்கம் நிற்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த அரசு ஆட்சியமைத்தாலும் அந்த அரசுடன் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது. கடந்தகால அனுபவங்களைக் கருத்தில்கொண்டு புதிய அரசுடன் நாம் பேச்சு நடத்துவோம். சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் இந்தப் பேச்சு நடத்தப்படும்.

தமிழ் மக்கள் விரும்பும் நியாயமான தீர்வை வழங்க அரசு முன்வந்தால் அதை நாம் மனதார ஏற்போம். ஒருமித்த நாட்டுக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வையே தமிழர்கள் விரும்புகின்றார்கள் என்பதை கடந்த அரசிடமும் இந்த அரசிடமும் நாம் தெளிவாக எடுத்துரைத்துள்ளோம்.

எனவே, எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்கள் விரும்பும் தீர்வைத் தந்தே ஆகவேண்டும். இல்லையேல் சர்வதேசம் அடுத்தகட்ட நடவடிக்கைளை எடுக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு மேசைக்குச் செல்ல வேண்டுமெனில் அசைக்க முடியாத பலத்துடன் செல்ல வேண்டும். எனவே, கூட்டமைப்பின் பிரதிநிதிகளை கடந்த தடவையை விட இந்தத் தடவை மேலும் அதிகரிக்கச் செய்ய நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அனைவரும் 'வீடு' சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும் - என்றார்.

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யுத்தம் முடிந்து பதினொரு வருடங்களாகி விட்டன. இப்போதுதான் போராளிகள் விவகாரத்தில் நித்திரை விட்டெழுந்திருக்கின்றார் போலும் செல்வம்.

இப்போது முன்னாள் புலிப் போராளிகள் இரண்டு, மூன்று அணிகளாக இருக்கின்றனர். ஈரோஸ் என மற்றொரு அணி செயற்படுகின்றது என்றெல்லாம் கவலைப்படுகின்றார் அவர்.

அவருக்கும் சேர்த்து சில விடயங்களை நினைவூட்டுவது இங்கு பொருத்தமானது என நினைக்கிறேன்.

2009 இல் யுத்தம் முடிந்த பின்னர் சில காலம் சிறையிலும் தடுப்புக் காவலிலும் வாடிய ஆயிரக்கணக்கான போராளிகள் சமூகத்துக்குள் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களுக்கான அச்சுறுத்தல்கள் தணியும் காலத்தில் - 2014 இல் - அவர்களை ஒரு கட்டமைப்பாக - அரசியல் கட்சியாக - உருவாக்கும் முயற்சி எடுக்கப்பட்டது. பத்திரிகை விளம்பரம் மூலம் அறிவித்தல் கொடுத்து, முன்னாள் போராளிகள் ஒன்றிணைக்கப்பட்டு, 2015 முற்பகுதியில் அவர்கள் 'ஜனநாயகப் போராளிகள்' கட்சியாகப் பரிணமித்தார்கள். அப்போது வேறு கட்சிகள், கட்டமைப்புகள் முன்னாள் போராளிகள் தரப்பில் ஆரம்பிக்கப்படவில்லை. இப்போது ஈரோஸ் என்று கூறப்படும் கட்டமைப்பில் செயற்படும் சிலரும் ஜனநாயகப் போராளிகள் கட்சியிலேயே இருந்தார்கள்.

ஜனநாயகப் போராளிகள் உருவாகிய காலகட்டத்தில் அவர்களின் மாவட்ட ரீதியான பிரதிநிதிகளோடு கூட்டமைப்பின் தலைவர்களை வவுனியாவில் அவர்கள் சந்தித்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் சம்பந்தன், மாவை சேனாதிராசா, சித்தார்த்தன், சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோரோடு செல்வம் அடைக்கலநாதனும் இருந்தார். தங்களையும் சேர்த்து, தங்களுக்கும் கூட்டமைப்பில் இடமளியுங்கள் என்ற கோரிக்கையோடு வந்த போராளிகளைப் பார்த்து சம்பந்தன் *"உங்கள் மத்தியிலிருந்துதான் பிள்ளையான் வந்தார். உங்கள் மத்தியிலிருந்து தான் கருணா வந்தார். உங்கள் மத்தியிலிருந்துதான் கே.பி. வந்தார். நீங்களும் அரச புலனாய்வுத் துறையினரால் ஒழுங்குபடுத்தி விடப்பட்டவர்கள்தான் என்று மக்கள் பேசுகின்றார்கள்."* - என்று ஏளனப்படுத்தி, கொச்சைப்படுத்திக் கருத்துக் கூறி, அனுப்பி வைத்தார் சம்பந் தன்.

அதை அவருக்கு அருகில் இருந்த செல்வம் உட்பட அனைத்துத் தலைவர்களும் செவிமடுத்து, மௌனம் சம்மதம் என்ற வகையில் ஆமோதித்தனர் என்பதை செல்வத்துக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

சரி, அந்தச் சமயத்தில் கூட்டமைப்புத் தலைவர்களின் நாடாளுமன்ற ஆசனங்களுக்குப் போட்டியாகப் போராளிகள் வந்து விடுவார்கள் என்ற விசனத்தில் அப்படி நடந்து கொண்டார்கள் என்று வைத்துக் கொண்டாலும் கூட, அதற்குப் பின்னர் இந்த ஐந்து வருடங்களாக என்ன செய்து கொண்டிருந்தார் செல்வம் அடைக்கலநாதன் - குழுக்களின் பிரதித் தலைவர் என்ற மேலதிக வசதி வாய்ப்புகள், ஆளணி, அம்புகளை வைத்துக் கொண்டு?

ஆக, மாவை சேனாதிராசாவின் இணக்கத்தோடு, தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் மட்டுமே ஜனநாயகப் போராளிகள் கட்சியினரை அரவணைத்து, ஏதோ தங்களுடன் கொண்டிணைக்கும் - கொண்டிழுக்கும் - நடவடிக்கையை முன்னெடுத்தார்.

அதுவும் கூட முன்னர் புலிகள் வடக்கில் நிலை கொண்டிருந்த காலக்கில்

## 13 ஆவது திருத்தத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

புதிய அரசால் அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும், இனப்பிரச்சினைகளுக்கு தீர்வாக கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தததை நீக்குவதாக ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது சாத்தியமற்ற செயற்பாடு என்றும் அவர் கூறினார்.

13ஆவது திருத்தம் இரு நாடுகளை அடிப்படையாகக் கொண்டது என்பதை மறந்து விட முடியாது என சுட்டிக்காட்டிய வாசுதேவ நாணயக்கார, மாகாண சபை முறைமையின் ஊடாகவே இனப் பிரச்சினைக்கு ஓரளவேனும் தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பொதுத்தேர்தலைத் தொடர்ந்து பழைய தேர்தல் முறைமையில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என்றும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு மாத்திரமல்ல அனைத்து மாகாணங்களுக்கும் அதிகாரம் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

## மாணவிகளுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொறியியல் பீட மாணவிக்கு பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் அவருக்கு தொற்று இல்லை என்று தெரியவந்துள்ளது.

அதேபோன்று கைதடி சித்த மருத்துவ பீடத்தில் கல்வி பயிலும் பொலனறுவை மாணவி ஒருவர் இரண்டு நாள் காய்ச்சல் காரணமாக நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று

# பாராளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## தேசியம்... சூழலியம்... சுயநிர்ணயம்



10

கா.சோ. சிவநேசன்

சூழலியல் நிபுணர்



2

க. கேதீஸ்வரநாதன்

கௌரவ உறுப்பினர்
நெடுந்தீவு பிரதேச சபை



9

சண் தயாளன்

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்



3

ஜீ. ஜெயதீஸ்

மரபியலாளர்



1

முதன்மை வேட்பாளர்

**பொ. ஐங்கரநேசன்**

சூழலியலாளர்

முன்னாள் விவசாய அமைச்சர் - வடமாகாணம்



8

மலர் சின்னையா

ஓய்வுநிலை அதிபர்
ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.



4

தே. மிதுசன்

மாணவன்
யாழ். பல்கலைக்கழகம்.



6

நிமலினி வோல்டன்

சமூக சேவகி

அரசியலில்
தமிழ்த் தேசியச் செழுமை
அபிவிருத்தியில்
நிலைபேறான முழுமை
சுற்றுச்சூழலில்
காணுமிடமெல்லாம் பசுமை



7

பா. காசிநாதன்

ஓய்வுநிலை ஆசிரியர்
யாழ். பரியோவான் கல்லூரி

## மாங்கனி வெற்றிக்கனி

| சுயேச்சைக் குழு - 8 | | X |
|---|---|---|



5

நா. பார்த்தீபன்

பொது முகாமையாளர் - பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - கரவெட்டி.

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காத்திருக்கிறது ஆபத்து!

மீண்டும் கொரோனாப் பேரிடர் தொடர்பான அச்சத்தில் நாடு மூழ்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலையின் முதலாவது படித் தாக்கம் கட்டவிழ்வதாகச் சில வட்டாரங்கள் கருதுகின்றன.

திட்டமிட்டபடி ஒகஸ்ட் 5ஆம் திகதியும் தேர்தல் நடத்த முடியாத நிலைமை ஏற்படலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல், அரசு மட்டத்திலும் அரசியல்வாதிகள் மட்டத்திலும் கூட எழுந்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் கொரோனா மோசமாகப் பரவி வருகின்றமையால் தேர்தலை உடனடியாக ஒத்திவைக்குமாறு கேட்டிருக்கின்றன.

அக்கட்சிகளின் தலைவர்களான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸா ஆகியோர் இக்கோரிக்கையைப் பகிரங்கமாக முன்வைத்துள்ளனர்.

அது மாத்திரமல்ல, கொரோனாத் தொற்றுத் தொடர்பான தகவல்களையும் உண்மைகளையும் அரசுத் தரப்பு மக்களுக்குத் தெரியப்படுத்தாமல் மறைக்கின்றது என்றும் அவர்கள் குறை கூறுகின்றனர்.

இதே குற்றச்சாட்டை ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கா மற்றும் சஜித் அணியின் லக்ஷ்மன் கிரியெல்ல போன்றோரும் தெரிவித்துள்ளனர்.

கந்தக்காட்டுப் புனர்வாழ்வு முகாமிலும் அதையடுத்து ராஜாங்கனையிலும் ஏற்பட்டுள்ள தொற்று, சமுதாயத்துக்குள் பரவி விவகாரம் சமூகத் தொற்றாக மாறிவிடும் அவலம் இருப்பதாக பல தரப்புகளும் மாறி மாறி எச்சரித்து வருகின்றன.

எனினும், சுகாதாரத் துறை வலியுறுத்தும் சுகாதார நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் மக்கள் மத்தியில் பெரும் மெத்தனப் போக்கே தென்படுவது மிக ஆபத்தான நிலைமையாக உள்ளது.

சமூக இடைவெளியைப் பேணுவது, அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்வது, முகக் கவசம் அணிவது, தேவையற்ற பயணங்களையும் போக்குவரத்தையும் தவிர்ப்பது, கூட்டம் கூடும் இடங்களுக்குச் செல்லாதிருப்பது போன்ற விடயங்களை மேற்கொள்வதில் ஆரம்பத்தில் காட்டிய ஈடுபாட்டை மக்கள் பெரும்பாலும் தொலைத்து விட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

யாழ் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் மற்றும் கைதடியில் தொற்றுக்குள்ளானோர் இருக்கக் கூடும் என்ற செய்தி வந்ததும் யாழ்ப்பாணத்தில் - வடக்கில் - பரபரப்பும், முன்னெச்சரிக்கையும் மக்கள் மத்தியில் தொற்றிக் கொண்டன.

ஆனால் சம்பந்தப்பட்டோருக்குத் தொற்று இல்லை என்ற செய்தி நேற்று மாலை வெளியானதும் 'அப்பாடா' என்று பல தரப்பிலும் ஆறுதல் பெருமூச்சு விடப்பட்டது. அத்தோடு திடீரென ஏற்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் கைவிடப்பட்டு விடலாம். ஆனால் அப்படி நடந்து கொள்ளாமல் பொறுப்போடு செயற்பட வேண்டிய மிக இக்கட்டான கட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் இருக்கின்றோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தில் ஓரிருவர் அல்லது சமூகத்தில் ஒரு சிலர் உதாசீனமாகவும் பொறுப்பின்றியும் நடந்து கொள்வது பெரும் சமூகப் பாதிப்பை ஏற்படுத்தி விடும் என்பதால் இவ்விடயத்தில் ஒவ்வொருவரும் கவனமாக இருக்க வேண்டும். தாம் கவனமாக இருப்பதுடன் மட்டுமல்லாமல், தங்களைச் சேர்ந்தவர்களையும் மட்டுமல்லாமல், பிறர் ஒவ்வொருவரையும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் செயற்படுகின்றமையுடன் சுகாதாரத்துறையினர் காட்டும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடப்பதற்கும் தூண்ட வேண்டும்.

இது தொடர்பான எச்சரிக்கையை கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவும் மீண்டும் விடுத்திருக்கின்றார்.

"இந்த வாரம் மிக முக்கியமானது. நாட்டில் அடுத்து வரும் சில நாள்களில் சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் கண்டறியப்படும் பேராபத்து உள்ளது. கொரோனா வைரஸ் சமூகத்துக்குள் ஊடுருவும் ஆபத்து மோசமாக உள்ளது" என்ற சாரப்பட அவர் எச்சரித்திருக்கின்றார்.

அதற்கான காரணங்களையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

விழிப்புணர்வுடனும், முன்னெச்சரிக்கையுடனும், அர்ப்பணிப்புடனும் ஒவ்வொரும் நடந்து கொள்வது மிக மிக அத்தியாவசியமாகும்.

இராணுவத் தளபதி கூறுவது போல -

அடுத்த, நான்கு, ஐந்து நாள்களில் ஏதோ ஓர் ஆபத்துக் காத்திருக்கலாம்.

ஆகவே, நாமும் தொற்றுக்குள்ளாகி மற்றொருவரையும் தொற்றுக்குள்ளாக்கும் அவல நிலையை ஏற்படுத்தாமல் நாம் ஒவ்வொருவரும் சுகாதார முறைப்படி வாழப் பழகி கொள்வோம்.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் ஓர் அங்கமாக முன்னாள் போராளிகளை ஒன்றிணைப்போம்!

### உறுதி கூறுகின்றார் செல்வம் அடைக்கலநாதன்



தேசத்துக்காகவும் மக்களுக்காகவும் விடுதலைப் போராட்டத்தில் அர்ப்பணித்த போராளிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் ஓர் அங்கமாக ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்ளுகின்ற ஒரு முறைமையை மேற்கொள்ளுவதற்காக, ரெலோ முதற்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக, அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில், நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர்–

தங்களுடைய இனத்தின் சார்பாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேறு திசையில் செல்லாமல் இருப்பதற்கும் ஆயுதம் ஏந்திய போராளிகள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வர வேண்டும் என்பதுதான் பிரதான நோக்கமாக இருக்கிறதென்றார்.

அந்த வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை இந்தப் போராளிக் கட்சிகள் பலம் சேர்க்க வேண்டும். அதன் ஓர் அங்கமாகவும் பங்குதாரர்களாகவும் வர வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம்.

அந்த வகையில் விடுதலைப் புலிகளின் போராளிகள் 3 அல்லது 4 அமைப்புகளாக இருக்கிறார்கள். தேசியத்தோடு இன உணர்வோடு இருக்கின்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்புகளைத் தனித்துவத்தோடு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் போராட்ட இயக்கங்கள் என்கின்ற அடிப்படையில் நாங்கள் ஒற்றுமையான – ஒரு நிர்வாக கட்டமைப்புடன் கொண்ட – அமைப்பாக செயற்பட வேண்டும் என்ற அடிப்படையில், தாங்கள் அந்த முயற்சியை மேற்கொண்டு வருகிறோம் எனவும், அவர் தெரிவித்தார்.

அடுத்த வாரம் நாங்கள் எல்லாரும் சேர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்குதாரர்களாக விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட இயக்கங்களை இணைக்கின்ற ஒரு முயற்சியை மேற்கொள்ளுகின்றோம். அந்த வகையில் தேசியத்தோடு நிற்கின்றவர்கள் குறிப்பாக ஈரோஸ், விடுதலைப் புலிகளை மூன்று அமைப்புகள் தற்போது உள்ளனர்.

அவர்களையும் சேர்த்து ஏற்கெனவே கூட்டமைப்பில் தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் புளொட் அமைப்பு ஆகிய இந்த இரண்டு இயக்கங்களும் ஏற்கனவே இருக்கின்ற காரணத்தால் ஏனையவர்களை நாங்கள் ஒன்று சேர்த்து ஓர் அமைப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் செயற்படுவதாக நாங்கள் முடிவெடுத்திருக்கின்றோம் எனவும், அவர் தெரிவித்தார்.

அந்த வகையில், அவர்களை இணைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இனிவரும் காலங்களில் அரசியல் நீரோட்டத்தில் அவர்கள் இணைத்து எங்களுடைய மக்களுடன் பயணிக்க உள்ளோம்.

அவர்களுடைய சிந்தனை அரசியல் ரீதியாகவும் வெளிப்பட வேண்டும். அவர்களுடைய சிந்தனை எங்களுடைய மக்களுடைய அபிலாசைகளை, எங்களுடைய மக்களுடைய அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறைகளைக் காட்ட வேண்டும். அவர்கள் எல்லோரும் – விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட எல்லோரும் – இவ்விடயத்தில் ஐக்கியமாக இருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பலப்படுத்தி நெறிப்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் பங்குதாரராக இருப்பதற்கு அவர்களுக்கு உருத்து இருக்கின்றது. அதற்கான வழியை ஏற்படுத்துவதற்கு தமிழீழ விடுதலை இயக்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

ஆகவே இந்த விடயத்தில் எங்களுடைய விடுதலை இயக்கங்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் பங்குதாரர்களாக வந்து எந்த நோக்கத்துக்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அதை நல்ல முறையில் கொண்டு செல்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்குவதே எங்களுடைய முயற்சியாக இருக்கின்றது.

வெகு விரைவிலே நாங்கள் இது சம்பந்தமான எல்லோரையும் ஒருங்கிணைத்து, விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்கின்ற அனைத்துப் போராளிகளையும் – தேசியத்தோடு பயணிக்கின்ற அனைத்துப் போராளிகளையும் – நாங்கள் உள்ளடக்கி ஓர் அமைப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் ஒரு பலமான கட்டமைப்பாக அதை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் எங்களுடைய செயற்பாடுகள் இருக்கும். – எனவும் அவர் தெரிவித்தார்.

## தமிழ் - முஸ்லிம் சமூகம் ஒன்றுபடுவது அவசியம்

### சஜித் அணி வேட்பாளர் அமீர் அலி வலியுறுத்து

எதிர்வரும் காலங்களில் தமிழ், முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு அரசியலில் பயணிக்க வேண்டிய தேவைப்பாடு இந்தக் கால அரசியலைப் பொறுத்த வரையில் இருக்கின்றது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எங்களுக்கு அழுத்தம், கஷ்டம் இருக்கின்றன. கடந்த காலத்தில் உங்களுக்காகச் சிறப்பாகப் பணி செய்தோம். எமது சமூகத்தை ஏமாற்றாமல், கொள்ளையடிக்காமல் மரணத்துக்குப் பயந்து சேவையாற்றிய தடயம் எங்கள் உள்ளத்தில் உள்ளது.

இது உண்மையாக இருக்குமாக இருந்தால் – இந்த மாவட்டத்துக்கு இந்தத் தலைமை தேவையாக இருந்தால் – மாவட்டத்துக்குத் தெளிவான வழிகாட்டல் வேண்டுமாக இருந்தால் – உங்கள் பிள்ளை உதவுவான் என்ற நம்பிக்கை இருந்தால் எனக்கு ஒரு புள்ளடி போடுவதில் என்ன பிழை இருக்கின்றது?

எங்களுக்கு இருக்கின்ற பிரச்சினை எமது இருப்பைப் பற்றிய பிரச்சினை. தமிழ்ச் சமூகத்தையும், தமிழ்த் தலைவர்களையும் துடைத்து எறிந்து விட்டோம் என்று சொல்கின்றார்கள். இனி துடைத்தெறிய இருக்கின்ற ஒரேயொரு சமூகம் முஸ்லிம் சமூகம். எனவே, அந்தப் பட்டியலிலே நாங்கள் போய்விடக் கூடாது.

தமிழ்ச் சமூகத்தினர் துடைத்து எறியப்பட்டார்கள் என்பதை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது. எதிர்வரும் காலங்களில் இரண்டு சமூகம் ஒன்றுபட்டு அரசியலில் பயணிக்க வேண்டிய தேவைப்பாடு இந்தக் கால அரசியலைப் பொறுத்த வரையில் இருக்கின்றது. இதற்கு நாங்கள் எல்லோரும் சமமான முறையில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நிலவரத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவைப்பாடும் இருக்கின்றது – என்றார்.

# விமல் வீரவன்ஸவுக்கு முரளிதரன் இடைத்தரகர் வேலை செய்கிறார்

## மனோ கணேசன் விசனம்



கொழும்பு, ஜூலை 15

*சங்கா, மஹேலவுக்கு சார்பாக வாய் திறக்காத முரளி, வீரவன்ஸவுக்கு ஆதரவாக வாய் திறந்துள்ளார் என்று விசனத்துடன் கூறியுள்ளார் என முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சரும், கொழும்பு மாவட்ட முன்னாள் எம்பியும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமாண மனோ கணேசன்.*

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் விமல் வீரவன்ஸவை ஆதரித்து நடைபெற்ற கூட்டமொன் றில் உரையாற்றிய முத்தையா முரளிதரன் –

இவ்வளவு காலமும் இருந்த மனோ கணேசன் ஒன்றும் செய்யவில்லை. அவர் அவ்வாறு செய்யாவிட்டால் எதற்காக மீண்டும், மீண்டும் அவருக்கு வாக்களித்து ஏமாறவேண்டும். – என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் மனோ கணேசன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

எனக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும், கொழும்பில் தமிழர்கள், அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று முன்னாள் கிரிகெட் வீரர் முத்தையா முரளிதரன் கூறுகிறார். இவருக்கு அரசியல் புத்தி மட்டு என ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களுக்கும் தெரியும் என்பதால், இவருக்கு நான் பதில் கூற விரும்பவில்லை. முரளிதரனுடன் கிரிக்கெட் அணியில் ஒன்றாய் விளையாடிய சக வீரர்கள் குமார் சங்ககார, மஹேல ஜயவர்தன ஆகியோர் சமீபத்தில் அநியாயமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருந்தபோது முழு நாடுமே அவர்களுக்காகக் குரல் கொடுத்தது. அவ்வேளையில் தன் நண்பர்களுக்காக வாயை திறக்காத இவர், இப்போது தன் பிழைப்புக்காக அரசியல்வாதி விமல் வீரவன்ஸவுக்காக வாய் திறந்துள்ளார். இதிலிருந்தே இவர் யார் என்பது ஊர்ஜிதமாயுள்ளது.

கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனிடமும், என்னிடமும் தமிழ் சமூகங்களை ஒப்படைக்க முடியாது எனக் கூறும் விமல் வீரவன்ஸவிடம், தமிழர்களுக்கான என்ன மாற்றுத்தீர்வுத்திட்டம் இருக்கிறது என்பதை கேட்டு சொல்ல வேண்டும். அதற்கு பிறகு அவருக்காக இவர் வாக்கு கோரலாம்.

தமிழ், முஸ்லிம் வாக்குகள் தங்களுக்கு வேண்டாம் என்று சொன்னவர் இந்த விமல் வீரவன்ஸ. கொழும்பு மாவட்டத்தில் இவர்களது கட்சி வேட்பாளர் பட்டியலில் ஒரு தமிழ், முஸ்லிம் வேட்பாளரும் இல்லை. இதுதான் உண்மை. இந்நிலையில் இவர் எதற்காக இன்று தமிழ் வாக்குகளைக் கோருகிறார்?

சஜித் பிரேமதாஸவை விட, கொழும்பில் அதிக விருப்பு வாக்குகளை பெற இவர் துடியாய் துடிப்பது எனக்கு தெரியும். இந்த ஒரே நோக்கத்திற்காகத்தான், தமிழர்களின் மீது திடீர் பாசம் விமல் வீரவன்ஸவுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம், கொழும்பில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்ய இவர் முயல்கிறார். இதற்குத்தான் முரளிதரன் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்கிறார்.

கொழும்பில் எம்.பியாக தெரிவு செய்யப்படும் நான், கொழும்பில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த இலங்கையிலும் வாழும் தமிழருக்காக ஆற்றியுள்ள பணி, தமிழர்களின் இருப்புக்கு காவல்காரனாக நான் ஆற்றியுள்ள பணி, தமிழர்களின் அடையாளமாக நிமிர்ந்து நிற்கும் என் பணி, தலைநகரில் மாகாண சபை மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் என்று ஒரு தமிழ் தலைமை வலையமைப்பையே உருவாக்கியுள்ள என் பணி, இங்கு வாழும் தமிழர்களுக்கு தெரியும்.

இது தனக்கு தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டு தெரிந்துக்கொண்டு முரளிதரன் விமல் வீரவன்ஸவுக்கு எடுத்து கூற வேண்டும். அதைவிடுத்து இங்கே வந்து இடைத்தரகர் வேலை செய்ய முயலக்கூடாது. தனது தொழில் வியாபாரம் வேறு, எமது இனத்தின் அரசியல் பிரதிநிதித்துவம் வேறு என்பதை இவர் உணர வேண்டும்.

முஸ்லிம் மக்களிடம் புரியாணி கிடைக்கும். ஆனால், வாக்குகள் கிடைக்காது. அதேபோல் தமிழ் மக்களிடம் பொன்னாடைகள் கிடைக்கும். ஆனால், வாக்குகள் கிடைக்காது. இதையும் முரளிதரன் தெரிந்துக்கொள்ள வேண்டும். – என்றார்.

## நிஜப் புலி பற்றிய செய்தி சேகரிக்க விரைந்த பெண் ஊடகவியலாளர் விபத்தில் சிக்கினார்





செய்தி சேகரிக்க விரைந்த பெண் ஊடகவியலாளர் ஒருவர் ஓமந்தை, இலங்கை வங்கி முன்பாக விபத்துக்குள்ளாகிக் காயமடைந்துள்ளார்.


வீதியின் குறுக்காகச் சென்ற மாட்டை விலத்திச் செல்ல முற்பட்ட வேளை வீதியை ஊடறுத்த நாய் ஒன்றுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது. விபத்தில் நாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ஊட கவியலாளரும் காயமடைந்தார். இந்த ஊடகவியலாளர் பயணித்த மோட்டர் சைக்கிளும் சேதத்திற்குள்ளாகி யுள்ளது. காயமடைந்த ஊடகவியலாளர் தனியார் வைத்திய சாலை ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ- 100)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் நிஜப் புலியின் அச்சுறுத்தல் குறித்து செய்தி சேகரிக்க சென்ற பெண் ஊடகவியலாளர் ஒருவர் விபத்தில் காயமடைந்துள்ளார்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றது. தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் மக்கள் குடிமனைக்குள் புலியினால் அச்சுறுத்தல் ஏற்படுவதாக கிராம மக்கள் தெரிவித்ததையடுத்து அந்தப் பகுதிக்கு

## முப்படைகளின் பங்கேற்புடன் நேற்று நாடாளுமன்றில் பாதுகாப்பு ஒத்திகை!



நாட்டில் அவசர நிலை ஒன்று ஏற்பட்டால், நாடாளுமன்றத்தில் முன்னெடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான விசேட ஒத்திகை நிகழ்வொன்று நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் இத்தகையதொரு பாதுகாப்பு ஒத்திகை நேற்று முதன் முதலில் நடத்தப்பட்டிருப்பதாக நாடாளுமன்றப் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

சாதாரண நாட்களில் நாடாளுமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதைப் போலவே இன்றும் முற்பகல் 10.30க்கு சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. சபை விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், விவாதத்திற்கு இடையில் ஏற்படக்கூடிய இடர்கள், பிரமுகர் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இந்த ஒத்திகை நடவடிக்கையின் போது பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள செயற்பாட்டுக் கண்காணிப்பு மத்திய நிலையத்திலிருந்து இந்த ஒத்திகை நிகழ்வுகள் கண்காணிக்கப்பட்டன. இந்த ஒத்திகையில், இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, இலங்கை பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், புலனாய்வுப்பிரிவினர், தீயணைப்பு பிரிவினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

## யாழ். பல்கலை வெளிவாரிப் பரீட்சைகள் இன்று முதல் திட்டமிட்டவாறு நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பரீட்சைகள் இன்று 15 ஆம் திகதி, புதன்கிழமை முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை வரை அறிவிக்கப்பட்ட நேர அட்டவணைப்படி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் கலைமானி வெளிவாரிக் கற்கை நெறியின் பகுதி இரண்டு (இறுதி வருடப்) பரீட்சைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் யாழ். பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகம் முடக்கப்பட்டதை அடுத்து, பரீட்சைகள் இடம்பெறுமா என்ற குழப்ப நிலை பரீட்சார்த்திகளிடையே நிலவி வந்தது.

இதனையடுத்து பல்கலைக் கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்துடன் தொடர்பு கொண்ட மாணவர்களுக்குப் பரீட்சைகள் திட்டமிடப்பட்ட படி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

CNR Courier & Cargo
எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# காங்கிரஸ் தலைவர், துணை முதலமைச்சர் பதவிகள் ராஜஸ்தானில் அடுத்தடுத்து பறிப்பு

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தின் காங்கிரஸ் அரசுக்கு எதிராகச் செயற்பட்டு வந்த அதே கட்சியைச் சேர்ந்த சச்சின் பைலட் அந்த மாநிலத்தின் காங்கிரஸ் குழுத் தலைவர் பதவியில் இருந்தும், துணை முதலமைச்சர் ஆகிய பதவிகளில் இருந்து நீக்கப்பட்டார்.

இரண்டாவது நாளாக நடைபெற்ற ராஜஸ்தான் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலும் சச்சின் பைலட் கலந்துகொள்ளவில்லை. இந்தக் கூட்டம் முடிவடைந்த பின்னர் அவர் துணை முதல்வர் பொறுப்பில் இருந்தும் கட்சியின் மாநிலத் தலைவர் பொறுப்பிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்குப் பதிலாக அசோக் கெலோத் முதலமைச்சர் பதவியில் நீடிப்பதற்கு 106 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகக் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. 200 சட்டமன்றத்தொகுதிகள் உள்ள ராஜஸ்தான் சட்டமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவதற்கு 101 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை. ஆங்கு காங்கிரஸ் கட்சிக்குத் தற்போது 107 சட்டமன்ற உறுப்பினர்களும் வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சை உறுப்பினர்கள் 15 பேரும் ஆதரவளித்து வருகின்றனர்.



இந்த நிலையிலேயே அசோக் கெலோத் 106 உறுப்பினர்களின் ஆதரவுடன் முதலமைச்சரானார். 2018ஆம் ஆண்டு டிசம்பரில் ராஜஸ்தான் தேர்தலில் வென்று காங்கிரஸ் ஆட்சியமைத்தபோது சச்சின் பைலட் முதல்வர் ஆக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடலில் இந்திய வான்படை; பரவுவது போலிச் செய்தி!



ஆழ்கடலில் நிறுத்தப்பட்டிருக்கும் உலங்கு வானூர்தி ஒன்றின் ஒளிப்படம் ஒன்று பகிரப்பட்டு அந்த ஒளிப்படத்தில் இருக்கின்ற உலங்குவானூர்தி இந்திய வான்படைக்குச் சொந்தமானது என்று செய்தி பரப்பப்பட்டு வருகிறது.

இந்திய வான்படை சார்பில் பாங்கோங் சோ ஏரியினுள் அபாச்சி ரக உலங்கு வானூர்தி நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இவை சீன அத்துமீறல்களை முறியடிப்பதற்கு ஏதுவாகத் தயார் நிலையில் இருப்பதாகவும் தண்ணீருக்கு அடியில் நிறுத்தப்பட்டுள்ள அந்த உலங்கு வானூர்தி குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது.

குறித்த ஏரியினுள் வரும் சீன நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிந்து இவற்றால் அழிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த ஒளிப்படம் பற்றி ஆராய்ந்ததில் இது போலிச் செய்தியில் என்று தெரியவந்துள்ளது. குறித்த ஒளிப்படம் ஜோர்டன் ஆழ்கடல் இராணுவ அருங்காட்சியகத்தில் எடுக்கப்பட்டது என்று தெரிய வந்துள்ளது.

# இணைய விளையாட்டு காரணமாக இலட்சக்கணக்கில் பறிபோன பணம்!

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் கிழக்குக் கோதாவரி மாவட்டத்திலுள்ள அமலாபுரத்தில் 9ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர் ஒருவர் கடந்த 20 நாள்களாக ஒன்லைன் விளையாட்டு ஒன்றைத் தனது தாயாரின் அலைபேசியில் பதிவிறக்கம் செய்து விளையாடி வந்துள்ளார்.

இந்த மாணவனின் தந்தை குவைத்தில் பணியாற்றி வருகிறார். இவர் மனைவியின் வங்கிக் கணக்குக்கு மாதம்தோறும் பணம் அனுப்பி வைக்கிறார். ஆந்த அலைபேசியில் அவருடைய வங்கி இணையச் செயலிகள் அந்த அலைபேசியில் பாவனையில் இருந்துள்ளன.

இந்த நிலையில், அந்த மாணவர் அலைபேசியில் குறித்த ஒன்லைன் விளையாட்டை விளையாடி வந்த நிலையில், இதில், கூடுதலாக ஆயுதத்தை வாங்குவதற்கு ஆயிரம் ரூபாவிலிருந்து 10ஆயிரம் ரூபா வரையில்



செலவாகும் என்றும், இதற்கு வங்கிக் கணக்கின் விவரங்களை வழங்குமாறும் குறுந்தகவல் வந்துள்ளது. இதன்படி, தனது தாயின் வங்கிக் கணக்கின் விவரங்களையும், பணப்பரிமாற்ற அட்டையின் விவரங்களையும் அளித்துள்ளார்.

இந்த நிலையில் 5.40 லட்சம் ரூபா வரை (இந்திய மதிப்பில்) அவரின் தாயாரின் வங்கிக் கணக்கில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதனை அறியாத அவரின் தாயார் தனது வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கச் சென்ற போது அதில் பணம் இல்லை எனத் தெரியவந்து அதிர்ச்சி அடைந்தார். பின்னர் இதுகுறித்துப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினார். அவர்களின் விசாரணையிலேயே மேற்படி விடயங்கள் அனைத்தும் தெரியவந்தன.

# வேறொரு பெண்ணுடன் பயணித்த கணவர் காருக்குமேலே ஏறி மனைவி போராட்டம்!



வேறு ஒரு பெண்ணைக் காரில் அழைத்துச் சென்ற கணவரின் காரை வழிமறித்து மனைவி ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

கணவரின் காரின் மேலே ஏறி நின்று அவர் சண்டையிட்டார். நடு வீதியில் நடந்த இந்தச் சம்பவத்தால் இந்தியாவின் மும்பை நகரில் வீதிப் போக்குவரத்து முடங்கியது. தெற்கு மும்பைப் பகுதியில் பெடர் வீதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

செல்வந்தர்கள் அதிகம் வசிக்கின்றனர் என்று கருதப்படுகின்ற குறித்த பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் நடந்தது. கணவரின் காருக்குப் பின்னால் அதைப் பின்தொடர்ந்து வந்த மனைவியின் கார் கணவரின் காரை இடைமறித்து நடு வீதியில் நின்றது. அதன் பின்னரே நடு வீதியில் மேற்படிச் சம்பவம் நடந்தது.

ஒட்டுநர் இருக்கையில் இருந்த கணவரை வெளியே இழுக்க முயன்ற மனைவி, அது இயலாமல் போனதும் கணவரின் காரின் முன் பகுதி மீது ஏறிக் கூச்சலிட்டார். முனைவியின் இந்தப் போராட்டத்தால் போக்குவரத்து முடங்கியது. பின்னர் அவ்விடத்துக்கு வந்த போக்குவரத்துப் பொலிஸார் இரண்டு கார்களையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். காரை வழிமறித்த பெண்ணுக்கு அபராதம் விதிக்கப்பட்டது என்றும் யார் மீதும் வழக்குப் பதிவு செய்யவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தொழிற்சாலையில் தீ 4 பேருக்குக் காயம்!

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தின் விசாகப்பட்டினத்திலுள்ள இரசாயனத் தொழிற்சாலை ஒன்றின் உலை வெடித்துத் தீ விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் நான்கு பேர் காயமடைந்தனர். விசாகப்பட்டினத்தின் புறநகரில் உள்ள பரவாடாவின் ராம்கி பார்மா நகரில் அமைந்துள்ள இரசாயனத் தொழிற்சாலையில் மருந்துப் பிரிவுகளில் இருந்து கழிவுகளை அகற்றும் போது இரவு 11 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்து நடந்த நேரத்தில் அங்கு நான்கு தொழிலாளர்களே இருந்தனர் என்றும் அவர்கள் அனைவரும் காயமடைந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

# திருமண நிகழ்வுக்குக் கடும் கட்டுப்பாடு மீறினால் மண்டப அனுமதி நீக்கப்படும்!

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் திருமண நிகழ்ச்சிகளுக்குக் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அவற்றை மீறினால் சம்பந்தப்பட்ட திருமண மண்டபத்தின் அனுமதிப் பத்திரம் செய்யப்படும் என்றும் அரசு எச்சரித்துள்ளது. பஞ்சாபில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவி வருகிறது.

அங்கு இதுவரை 7 ஆயிரத்து 821 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது. மேலும் 199 பேர் இதுவரை சாவடைந்துள்ளனர். தொற்றைக் குறைப்பது குறித்து பஞ்சாம் மாநில அரசு பல்வேறு ஊரடங்குக் கட்டுப்பாடுகளை அறிவித்தது.

அதன்படி பொது இடங்களில் 5 பேருக்கு மேல் அனுமதி இல்லை. மீறுபவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்படும், திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் 50 பேர் வரையிலுமே பங்கேற்க முடியும் என்று கூறப்பட்டது. ஆனால் தற்போது 30 பேர் மட்டுமே திருமணத்தில் பங்கேற்க அனுமதிக்க முடியும் என்றும் அதை மீறினால் சம்பந்தப்பட்ட திருமண மண்டபத்தின் உரிமம் இல்லாது செய்யப்படும் என்றும் அரசு எச்சரித்துள்ளது.

# ஹொங்கொங்கில் நடந்த வாக்கெடுப்பு பாதுகாப்புச் சட்டத்தை மீறிய செயல்!

## எச்சரிக்கிறது சீனா








ஹொங்காங்கில் ஜனநாயகச் சார்பு எதிர்க்கட்சியினர் முன்னெடுத்த மாதிரி வாக்கெடுப்பு தமது புதிய தேசிய பாதுகாப்புச் சட்டத்தை மீறிய செயல் என்று சீனா எச்சரித்துள்ளது. சீனாவால் ஹொங்கொங் மீது விதிக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்புச் சட்டம் குறித்துக் ஹொங்கொங்கின் எதிர்க்கட்சி கடந்த வார இறுதியில் அடையாள வாக்கெடுப்பு ஒன்றை முன்னெடுத்தது. அதில் வாக்களிப்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான ஹொங்கொங் மக்கள் திரண்டனர்.

சீனாவின் புதிய சட்டத்தால் தூண்டப்பட்டுச் சீனாவுக்கு எதிரான உணர்வை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஹொங்கொங்கின் எதிர்க்கட்சியினர் சார்பில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்த வாக்கெடுப்பின் மூலம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடக்கவுள்ள சட்டமன்ற சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கும், சீனச் சார்பு போட்டியாளர்களிடமிருந்து முதன்முறையாகக் ஹொங்கொங்கின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதற்கும் ஜனநாயக சார்பு வேட்பாளர்களுக்கு இந்த அதிகாரபூர்வமற்ற வாக்கெடுப்பு உற்சாகமளிக்கும் என்று கூறப்பட்டது.

இந்த வாக்கெடுப்பின் முதற்கட்ட முடிவுகளின்படி 6இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை இளம் ஜனநாயகவாதிகள் பெற்றனர். இது சீனா அதிகாரிகளைத் தூண்டிவிடக் கூடிய ஒரு குழு குறித்த மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது என்று தெரிவித்தே இந்த வாக்கெடுப்புப் புதிய சட்டத்துக்கு முரணானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹொங்கொங்கிலுள்ள சீனப் பாதுாப்பு அலுவலகம் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்படி வாக்கெடுப்புத் தமது புதிய சட்டத்தை மீறிய செயல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 17 ஆண்டுகளின் பின் சாவுத் தண்டனை!

கொலைக் குற்றவாளி ஒருவருக்கு 17 ஆண்டுகளின் பின்னர் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. அமெரிக்காவின் ஒக்லஹோமா மாகாணத்தைச் சேர்ந்த டானியல் லீ (வயது 47) என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, 3 பேரைக் கொலை செய்த வழக்கில் அவருக்குச் சாவுத் தண்டனை விதித்து நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது.



17 ஆண்டுகளுக்குப் பின், ஒரு குற்றவாளிக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது அமெரிக்காவில் இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது. லீக்கு, விஷ ஊசி செலுத்தி, தண்டனை நிறைவேற்ற, நாள் குறிக்கப்பட்டிருந்தது. ஆனால் லீயால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், 'கொரோனா' வைரஸ் அச்சத்தால், தண்டனையை நிறைவேற்றுவதை நேரில் பார்க்க வர முடியாது என்பதால், தண்டனையை நிறுத்தி வைக்கும்படி நீதிமன்றத்தை அணுகினர்.

அதைத் தொடர்ந்து இண்டியானா மாகாணத்தின் தெற்கு மாவட்ட நீதிமன்றம் தண்டனையை நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளது. ஆனால் வெகு விரைவில் அவருக்குரிய தண்டனை நிறைவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனித்திருக்க முடியவில்லை பிரேசில் அதிபர் தெரிவிப்பு



கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனோரா தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தன்னால் இனியும் தனித்திருக்க முடியாது என்று மீண்டும் கொரோனா பரிசோதனை செய்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜெய்ர் போல்சனோரா மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா பரிசோதனைக்கான முடிவு இன்னும் சில மணி நேரங்களில் வெளிவரவுள்ளது. நான் முடிவுக்காகக் காத்திருக்கிறேன். என்னால் வீட்டில் வழக்கமாகச் செய்து கொண்டிருப்பதையே தொடர்ந்து செய்ய முடியவில்லை. தனிமை மிக மோசமாக உள்ளது. நான் விரைவில் பணிக்குச் செல்ல வேண்டும். ஒரு வேளை முடிவு வேறாக இருந்தால் நான் இன்னும் சில நாள்களுக்குக் காத்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், தான் நலமுடன் இருப்பதாகவும் காய்ச்சல், மூச்சுத் திணறல் போன்ற பிரச்சினைகள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். முன்னதாக, பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ கொரோனாவைப் பற்றிக் கவலைப்படாமல் முகக்கவசம் அணியாமல் சுற்றித் திரிந்து கடும் விமர்சனத்துக்கு உள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானில் மீண்டும் கொரோனாத் தொற்று!

ஜப்பானின் தலைநகர் டோக்கியாவில் உள்ள நாடக அரங்கு ஒன்றில் நாடக உறுப்பினர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த நாடக அரங்கங்களில் சமீப நாள்களில் கலந்து கொண்ட பார்வையாளர்கள் அனைவரையும் பரிசோதனை செய்யும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. ஷின்ஜுகு நகரில் உள்ள மோலியர் தியேட்டரில் கடந்த சில நாள்களாக நாடகம் அரங்கேற்றப்பட்டது.

அதில் நடித்த நபர்களிடையே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து நாடக நிகழ்வில் கலந்து கொண்ட பார்வையாளர்கள் அனைவரும் பரிசோதிக்கப்படவுள்ளனர்.

டோக்கியாவில் நேற்று மட்டும் 119 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஜப்பானில் 23ஆயிரம் பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் ஆயிரம் பேர் சாவடைந்துள்ளனர். பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஜப்பானில் கொரோனாத் தொற்று எண்ணிக்கை அதிகம் இல்லையென்றாலும், தற்போது புதிதாகத் தொற்று ஏற்படத் தொடங்கியுள்ளன.

## தாய்வானில் எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டம்!




தாய்வானின் பிரதான எதிர்க்கட்சியால் அந்த நாட்டின் நாடாளுமன்றம் ஆக்கிரமிக்கப்பட்டது. உயர் மட்டக் கண்காணிப்புக் குழு ஒன்றுக்கு தாய்வான் ஜனாதிபதியின் நெருங்கிய உதவியாளரை நியமித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்தே எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் மோதலில் ஈடுபட்டனர்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் நுழைந்தபோது இந்த மோதல் நடந்தது. ஆளும் ஜனநாயக முற்போக்குக் கட்சியின் (டிபிபி) சட்டமியற்றுபவர்கள் பிரதான எதிர்க்கட்சியான கோமிண்டாங் (கேஎம்டி) எழுப்பிய தடுப்புகளை உடைத்தனர். இதனால் அங்கு மோதல் வெடித்தது.

ஜனாதிபதி சாய் இங் - வென் தனது மூத்த உதவியாளர் சென் ஜூவைச் சுயாதீன அரச கண்காணிப்புக் குழுவான கண்ட்ரோல் யுவானுக் குத் தலைமை தாங்குவதற்கு நியமித்ததில் இருந்து எதிர்க்கட்சியினர் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆஸியில் பல பகுதிகளில் ஊரடங்கு!

ஆஸ்திரேலியாவில் கொரோனாத் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது அங்கு தொற்று அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் ஆஸ்திரேலியாவில் உள்ள பல்வேறு மாகாணங்கள் ஊரடங்குக் கட்டுப்பாட்டை மீண்டும் நடைமுறைப் படுத்தி வருகின்றன.

இந்த நிலையில், விக்டோரியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் மாகாணங்களில் ஏற்பட்டுள்ள சமூகப் பரவல் காரணமாகப் பிற மாநிலங்கள் தற்போது நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன.

தற்போது ஏற்பட்டிருக்கும் பரவல் இரண்டாம் கட்டப் பரவலாக இருக்கக்கூடும் என்ற நிலையில் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அந்தந்த மாகாண அரசுகள் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

சில மாகாணங்களில் எல்லைகள் மூடப்படுகின்றன. விக்டோரியா மாகாணத்தின் தலைநகர் மெல்போர்னில் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வலுவான அணுகுமுறையை இலங்கை மீது கைக்கொள்க!

## ஏழு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஐ.நா. மனித உரிமை சபையில் வலியுறுத்தல்

ஜெனிவா, ஜூலை 14

இலங்கையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் இன்னமும் வலுவான அணுகுமுறைகளைப் பிரயோகிப்பது மிக அவசியமானது என 7 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஜெனிவாவில் வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 44 ஆவது கூட்டத்தொடரில் அமைதியான முறையில் சுதந்திரமாகக் கூடுவதற்கும் கலந்துரையாடுவதற்குமான உரிமை பற்றி ஐ.நா விசேட அறிக்கையாளரினால், அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சிறுபான்மையினச் சமூகங்களின் உரிமைகளுக்கான சர்வதேசக் குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவைகள் உள்ளிட்ட 7 மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையிலேயே இலங்கை தொடர்பாக இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐ.நா.விசேட அறிக்கையாளரினால் சுட்டிக்காட்டப்பட்டதைப் போன்றே இலங்கையில் சிவில் சமூகச் செயற்பாடுகளுக்கான இடைவெளி வேகமாகச் சுருங்கி வருகின்றது.

மேலும் சிவில் சமூக அமைப்புக்கள், இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், விசாரணைகளுக்கு அதிகளவு உட்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில் தற்போது,கொரோனா வைரஸ் அச்சுறுத்தலின் ஊடாக கருத்துச்சுதந்திரம், அமைதியான முறையில் கூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

அத்துடன் சமூகச் செயற்பாட்டாளர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அமைதியாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கட்டற்ற அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றமையை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் இலங்கையின் சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பகிரங்கமாகப் கருத்து வெளியிடக்கூடிய ஒரே தளமாக ஐ.நா.மனித உரிமைகள் சபை காணப்படுகிறது.

ஆகவே இலங்கையில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படுவதைக் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அவதானிக்கவேண்டும்.

மேலும் இலங்கை விவகாரங்களில் வலுவான அணுகுமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் - என்றுள்ளது.

# கைதடி சித்த ஆயுர்வேத பீடத்தின் மாணவிக்கு கொரோனா அறிகுறி!

## யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 14

கைதடிசித்த ஆயுர்வேத பீடத்தில் கல்வி கற்கும் மாணவியொருவர் கொரோனா தொற்று சந்தேகத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த ஆயுர்வேத பீடத்தில் கல்வி கற்கும் பொலன்னறுவையை சேர்ந்த மாணவியொருவரே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

2 நாள்களாகக் காய்ச்சல் மற்றும் சில அறிகுறிகளையடுத்து கொரோனாச் சந்தேகத்தில் இன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று கொறொனா அறிகுறியுடன் எழுவைதீவிலிருந்து அனுமதிக்கப்பட்ட பொலனறுவையைச் சேர்ந்தவருக்குக் கொரோனா தொற்று ஏற்படவில்லையென்பது தெரிய வந்துள்ளது.



# 20 கிலோ கஞ்சாவுடன் இரண்டு பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை 14

சாவகச்சேரி நகரில் கைமாற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்ட 20 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதோடு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றிரவு 7.30 மணியளவில் இந்தக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது, திருகோணமலையைச் சேர்ந்த ஒருவரும், சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கடற்படைத் தளபதி பியால் டி சில்வா புதன் ஓய்வு; அட்மிரலாகத் தரமுயர்வு

கொழும்பு, ஜூலை 14

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஜனாதிபதியினால் இன்று முதல் அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என்று கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா நாளையுடன் ஓய்வு பெற உள்ளார். இந்த நிலையிலேயே அவர் அட்மிரலாக பதவி உயர்ததப்பட்டுள்ளார்.

அதேவேளை, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஓய்வு பெறுவதற்கு முன்பு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுச் சந்தித்துப் பிரியாவிடை பெற்றுக் கொண்டுள்ளார்.

# கான்ஸ்டபிளை மோதிக் கொன்ற பின்னர் தப்பி ஓடிய டிப்பர் கண்டுபிடிக்கப்பட்டது

## காயமுற்ற இரு சார்ஜண்ட்கள் ஆஸ்பத்திரியில்

மாத்தறை ஜூலை 14

மாத்தறை ஹக்மன, கோங்கால பொலிஸ் காவலரண் பகுதியில் பொலிஸாரின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி பொலிஸார் ஒருவரைக் கொன்று, மற்றிருவரைக் காயப்படுத்தி விட்டுத் தப்பிச்சென்ற டிப்பர் ரன்ன பிரதேசத்தில் வைத்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ரன்ன, கட்டகடுவ பிரதேசத்தில் வீடு ஒன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த டிப்பர் வாகனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு இடம்பெற்ற குறித்த விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்த நிலையில் மேலும் இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



டிப்பர் வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் கடமைகளில் இராணுவம் ஈடுபடாது

## பொலிஸார் மட்டுமே பணிபுரிவர் என்கிறார் மஹிந்த தேசப்பிரிய



(ந.லோகதயாளன், டிலக்சன், நிதர்ன்)

யாழ்ப்பாணம், ஜூலை 14

தேர்தல் நடவடிக்கைகளில் ஒருபோதும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். பொலிஸார் மாத்திரமே தேர்தல் கடமையில் ஈடுபடுவார்கள் எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

இரு நாள் பயணமாக வடக்குக்கு விஜயம் மேற்கொண்ட தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, இன்று யாழ்.மாவட்ட செயலகத்துக்கு விஜயம் மேற்கொண்டு உதவித் தேர்தல் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடியதோடு அரச அதிபர், மேலதிக அரச அதிபர்கள் மற்றும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் உட்பட்ட அதிகாரிகளுடன் சந்திப்பு மேற்கொண்டார். அதன்பின் ஊடகங்களுக்குகருத்துதெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும் போது வடக்கில் சில தேர்தல் விதிமுறை மீறல்கள் அதிகமாக இடம்பெறுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அதாவது வீதிகளில் வேட்பாளர்களின் இலக்கங்கள் மற்றும் சின்னங்கள் எழுதப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அது நிறுத்தப்படவேண்டும்.

அத்தோடு இங்கே அரச நிதியில் அமைக்கப்படும் வீதிகள் சில வேட்பாளர்களினால் திறப்பு விழாக்கள் செய்யப்பட்டு திறக்கப்படுகின்றன. அதனை உடனடியாக நிறுத்தும்படி நான் உத்தரவு பிறப்பித்திருக்கின்றேன். அவ்வாறான அனைத்து திட்டங்களின் முன்பாக மக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டம் என பெயர்ப் பலகை நாட்டவேண்டும்.

அத்தோடு தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வாக்களிப்பதுதொடர்பாக நாம் ஆணைக்குழுவில் ஆராய்ந்து வருகின்றோம். அது தொடர்பில் விரைவில் அந்த அறிவித்தல் வரும். அதே போல வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்குள் ளாக்கப்பட்டுள்ளவர்கள் தேர்தல் தினத்தன்று மாலை 4 தொடக்கம் மாலை 5 மணி வரை வாக்களிப்பு நிலையம் சென்று வாக்களிப்பை மேற்கொள்ள முடியும்.

அண்மையில் ஒரு வேட்பாளர் 75 கள்ள வாக்குகள் போட்டமை எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளன. அது தொடர்பில் ஆணைக்குழுவில் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

தேர்தல் கடமைகளில் பொலிஸார் மாத்திரமே ஈடுபடுத்தப்படுவார்கள். இராணுவத்தினர் எக்காரணத்துக்காகவும் கடமையில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள். அதாவது எமக்கு ஒரே ஒரு விடயத்துக்குத்தான் இராணுவத்தின் உதவி தேவைப்படுகின்றது. அதாவது தீவுப் பகுதிகளில் இருந்து விரைவாக வாக்குப் பெட்டிகளை வாக்குச் சேகரிப்பு நிலையத்துக்கு எடுத்து வருவதற்கு விமானப்படை மற்றும் கடற்படையினரின் உதவி தேவையாக உள்ளது. எனவே வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் பணியில் மட்டும் இராணுவத்தினர் பயன்படுத்தப்படுவார்கள். தேர்தல் கடமைகள் அனைத்திலும் பொலிஸார் மாத்திரமே கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

அத்தோடு தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் ஒருவரைக் கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு மாத்திரமே உள்ளது. அதனை வேறு எவரும் மேற்கொள்ள முடியாது - என்றார்.

# பணத்துக்கும், போத்தலுக்கும், பார்ஸலுக்கும்

# விலை போகாதீர் என்று கோருகின்றார் விக்கி

பணத்துக்கும், சாராயப் போத்தலுக்கும், சாப்பாட்டுப் பார்ஸலுக்கும் விலை போய் உங்கள் வாக்குகளை விணாக்கி விடாதீர்கள் என்று கோருகின்றார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவரும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

நேற்று மாலை வடமராட்சி திக்கத்தில் தாம் பங்குபற்றிய தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தேர்தல்களுக்கு முன்னர் நடைபெறும் நடவடிக்கைகள் பல மனவருத்தத்தைத் தருகின்றன.

நண்பர் ஒருவர் இரு தினங்களுக்கு முன்னர் என்னிடம் கேட்டார். 'சேர்! நீங்கள் வாக்காளர்களுக்கு சாராயப் போத்தல்கள் விநியோகிக்கவில்லை. சாப்பாட்டுப் பார்சல்கள் கொடுக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் ஏதேனும் பணத்தொகை கூடக் கொடுக்கவில்லை. எப்படி தேர்தலில் வெற்றியீட்டப் போகின்றீர்கள்?' – என்று.

நான் அதிர்ந்து விட்டேன்.

'எங்கள் மக்கள் தமது புனிதமான வாக்குகளை கேவலம் ஒரு போத்தல் சாராயத்திற்கு விற்று விடக் கூடியவர்களா?' என்று கேட்டேன்.

'சேர்! எந்த ஒரு வாக்காளரும் நான் உங்களுக்கு வாக்களிக்க நீங்கள் என்ன தருவீர்கள் என்று தான் கேட்கின்றார்கள். இன்றைய நிலை அப்படித்தான்' என்றார்.

'அதாவது ஐந்து வருட காலத்தில் என்ன செய்யப் போகின்றீர்கள் என்று கேட்காது உடனே எமக்கு என்ன தருவீர்கள் என்று கேட்கின்றார்கள் அல்லவா?' என்றேன்.

'ஆமாம்! அதுவே தான்' என்றார்.

உடனே நான் 'முன்னொரு தேர்தலில் நடந்தது உங்களுக்குத் தெரியுமா? என்றேன்.

'என்ன?' என்றார்.

சென்ற 2015ம் ஆண்டுத் தேர்தலில் ஒரு வேட்பாளர் ஒவ்வொரு வாக்காளருக்கும் ரூபா 5,000 வீதம் பணம் கொடுத்து வெற்றி பெற்றார் எனக் கூறப்படுகின்றது. ஆனால் அதுவல்ல முக்கிய செய்தி. வென்று வெற்றி வாகை சூடி வந்த நாடாளுமன்ற உறுப்பினர் தனது வாக்காளர்கள் கோரிய சில கோரிக்கைகளை நிராகரித்தாராம். அப்போது அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரைக் கடிந்து 'நாங்கள் தான் உங்களை தேர்ந்தெடுத்தோம். நீங்கள் எங்களுக்கு துரோகம் செய்கின்றீர்கள்.' என்றார்களாம்.

உடனே நாடாளுமன்ற உறுப்பினர் கோபம் கொண்டு 'நான்தானே உங்கள் வாக்குகளை வாங்கிவிட்டேனே. வாக்காளர்களுக்கு இருக்கும் உரித்துக்களை நீங்கள் இழந்துவிட்டீர்கள். எனக்கும் உங்களுக்கும் இடையில் ஒரு கடப்பாடும் இல்லை' என்றாராம்.

இதில் பல விடயங்கள் அடங்கியுள்ளன.

1. பணம், பொருள் போன்றவற்றைப் பெற்று வாக்குகளை அளிப்பதால் வாக்காளரின் தனித்துவமும் சுதந்திரமும் மறைந்து போகின்றன. அவர் தமக்கு கொடுப்பனவுகள் தருபவருக்கு கடப்பாடு உடையவர் ஆகின்றார்.

2. இவ்வளவு பணத்தை வாக்காளர்களுக்காகச் செலவழிப்பவர்கள் ஒரு வியாபாரத்தில் பண முதலீடு செய்பவர்கள் போல் ஆகின்றார்கள். அதாவது லட்சம் இலட்சமாக வாக்காளர்களுக்குப் பணம் செலவிட்டு விட்டு பதவிக்கு வந்ததும் கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்கத் தலைபடுகின்றார்கள். எமது நாடாளுமன்ற அங்கத்தவர்களை கொமின் வாங்கி, ஊக்கிகள் வாங்கி, பணம் சம்பாதிக்கப் பண்ணுகின்றவர்கள் வாக்காளர்கள்தான் என்பதை எம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

என்னுடைய சிங்கள நண்பர் ஒருவர் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதி அமைச்சர் ஆனார் – 1977 ஆம் ஆண்டில். அவரை வாழ்த்தி விட்டு அடுத்து என்ன செய்வதாக உத்தேசம் என்று கேட்டேன். உடனே அவர் 'ஏன் ஓய்! நான் தேர்தலில் செலவழித்த பணம் அத்தனையையும் மீண்டும் உழைக்க வேண்டாமா?' என்று கேட்டார். அதைத்தான் அவர் செய்தார். செலவழித்த தொகையிலும் பார்க்க பல மடங்கு பணம் சம்பாதித்தார். நாடாளுமன்ற



அங்கத்தவர் பதவியைப் பாவித்து இதைச் செய்தார். கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? ஜே.வி.பியினரால் அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற அங்கத்தவர்கள் பணம் சேர்ப்பதை மக்கள் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. பணம் கொடுக்காமல் கொடுப்பனவுகள் ஏதும் இன்றி நாம் வாக்காளர்களிடம் இருந்து அவர்கள் வாக்கை எப்படிப் பெறமுடியும் என்று கேட்ட நண்பருக்குப் பதில் அளித்தேன். நான் என் கட்சி பற்றித்தான் கூற முடியும் என்று கூறி பின்வருமாறு பதில் அளித்தேன் –

1. நாங்கள் மக்களிடம் பணம் கேட்டு வாங்கியே தேர்தல் செலவுகளை ஈடுசெய்கின்றோம். அதன் காரணத்தினால் நாங்கள் மக்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம். நாங்கள் உங்கள் வாக்கை ஏற்கனவே வாங்கியுள்ளோம். எமக்கு ஏதும் கடப்பாடில்லை



என்று நாங்கள் கூற முடியாது. அவர்கள் தான் எம்மை வாங்கியுள்ளார்கள். நாம் அவர்களுக்கு சேவையாற்றியே ஆக வேண்டும்.

2. எங்கள் கட்சி வென்றால் வேட்பாளர்கள் நாம் ஒவ்வொருவரும் எமது மாதாந்த படிகளில் இருந்து 10 வீதம் மக்கள் சேவைக்குச் செலவழிக்கப் போகின்றோம். இது 5 வருடத்திற்கு ஒவ்வொரு மாதமும் நாங்கள் மக்களுக்காகச் செலவு பண்ணப் போகும் பணம். நம்பிக்கைப்பொறுப்பிற்கு கொடுக்கப்போகும் பணம்.

உடனே பெறுவது உசிதமா அல்லது ஐந்து வருடங்களுக்கு நம்பிக்கைப் பொறுப்பு ஊடாகப் பெறுவது உசிதமா?

நம்பிக்கைப் பொறுப்பு ஊடாக வருவதென்றால் தனிப்பட்ட முறையில் பணம் எமக்குக் கிடைக்காது என்று நீங்கள் சொல்லக்கூடும். ஆனால் எங்கள் நம்பிக்கைப்பொறுப்பு உங்களுக்குத் தேவைகள் இருக்கும் போது உங்களுக்கும் சேவை செய்யும் என்பதை மறவாதீர்கள். ஆகவே ரூபா ஐயாயிரமோ பத்தாயிரமோ பணத்தை அல்லது சாராயப் போத்தலையோ, உணவுப் பார்சலையோ உடனே பெற்று வாக்களிப்பதிலும் பார்க்க ஐந்து வருடங்களுக்கு உங்கள் எல்லோருக்கும் செயற்றிட்டங்கள் வரும் விதத்தில் எங்களுக்கு வாக்களியுங்கள் என்று என் நண்பரிடம் கேட்டுக் கொண்டேன்.

நாங்கள் சட்டத்தரணிகளாக வந்த போது எமது கட்சிக்காரர்களின் பணத்தை வேறாக வைத்துக் கண்டிப்பாக கணக்குக் காட்ட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டோம். வரும் பணம், நிதிகள் யாவும் எமது கட்சிகாரர்கள் சார்பில் வந்தால் அவற்றை எமது சொந்த வங்கிக் கணக்கில் போட்டு வைக்க முடியாது. அவற்றின் மேல் எமக்கிருக்கும் கடப்பாடு ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளரின் கடப்பாடு. எமது சொந்தப் பணத்தையும் கட்சிக்காரர்கள் பணத்தையும் வேறு வேறாக வைத்திருக்க வேண்டியது எங்கள் பொறுப்பு. மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்கள் சார்பில் நடந்து கொள்ள அவர்கள் எங்களை அனுமதித்த காரணத்தினால்த் தான் இந்த நம்பிக்கை பொறுப்பு என்ற கடப்பாடு எங்களை வந்தடைந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவி நம்பிக்கைப் பொறுப்பைச் சார்ந்த ஒரு பதவி. அது திவ்யமான ஒரு பதவி. அதை ஒரு வியாபாரமாக்குவது மகா பாவம். அதற்கான தண்டனையை நாங்கள் அனுபவித்தே ஆக வேண்டும். அதனாலத்தான் சில தொழில்களைப் பவித்திரமான தொழில்கள் என்கின்றார்கள். அத் தொழில்கள் மீது மக்கள் அலாதியான நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றி வருவோமானால் எமது தொழிலும் பவித்திரமான தொழிலாகும். இனிமேலாவது அரசியல்வாதிகளின் தொழிலானது ஒரு பவித்திர தன்மையைப் பெற வேண்டும்.

ஆகவே அரசியலில் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டுவர வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். பணம் கொடுத்து வேறு பொருள் கொடுத்து வாக்குகளைக் கேட்பதிலும் பார்க்க கொள்கைகள் மீது நாட்டம் காட்டி எமது வாக்காளர்கள் எமக்கு ஆதரவு வழங்க நாம் இடமளித்துக் கொடுக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் நாங்கள் பொருளாதார ரீதியாக மிகவும் வலிமைகுன்றிய மக்கட் கூட்டம் என்பது உண்மையே. ஆனால் நாங்கள் தமிழர்கள் என்ற முறையில் பெருமை கொண்டவர்கள். அடுத்த வேளை சாப்பிட வழி இல்லை என்றாலும் எங்கள் மானத்தை விட்டுக் கொடுக்காதவர்கள். அண்மைக் காலங்களில், அதுவும் 2009 இன் பின் நாங்கள் ஏனோ மாறிவிட்டோம். இனி எல்லாம் முடிந்து விட்டது என்ற எண்ணமா?

எனதருமை மக்களே! எதுவுமே முடியவில்லை. நியாயமான தீர்வு பெறும் வரையில் மீண்டும் மீண்டும் எமது தமிழ்ச் சமூகம் கிளர்ந்தெழும் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் கொள்கைகளில் இருந்து விலகாமல் இருந்திருந்தால் முதலமைச்சர் பதவிக்காலம் முடிந்ததும் நான் நிம்மதியாக வீடு சேர்ந்து என் ஓய்வு வாழ்க்கையைத் தொடர்ந்திருப்பேன். கொள்கை பிறழ்வுஎந்தளவுக்கு ஓர் அசம்பாவிதத்தை, அழிவை எம் மக்களுக்குக் கொண்டு வரப் போகின்றது என்பதை உணர்ந்தே நான் என் பயணத்தைத் தொடங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தெந்தக் கொள்கைகளைப் புறக்கணித்ததோ அவற்றை நாம் இப்பொழுது ஏந்திச் செல்கின்றோம். மொத்தத்தில் இன்றைய கூட்டமைப்பு என்று அழைக்கப்பட வேண்டியது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியையே. தம்பி பிரபாகரனால் தொடங்கப்பட்ட கூட்டமைப்பானது கொள்கைகளை விட்டு மரணப் படுக்கையில் இப்போது தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. பாவம்! அவர்களை இத்துடன் வெளியேற இடம் விடுங்கள் என்பதே நாம் எம் மக்களிடம் விடும் கோரிக்கை. கொள்கைப் பற்றுள்ள தேசியக் கூட்டணியை கூட்டமைப்பின் இடத்தில் நிறுத்துங்கள் என்று எம் மக்களிடம் பணிவுடன் வேண்டுதல் விடுக்கின்றேன்.

எமது உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றம் செல்ல ஓர் அவகாசம் தாருங்கள். மக்கள் மீது அன்புடன் பற்றுறுதியுடன் கொள்கைகளின் அடிப்படையில் நாம் செயல்படுவோம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கிற்குரிய பொருளாதார கொள்கையை வகுப்பதற்கு வலியுறுத்துகின்றார் விக்னேஸ்

## ஈ.பி.டி.பி. சார்பில் யாழ். மாவட்டத்தில் களமிறங்குகின்றார்




வடக்கிற்குரிய பொருளாதார கொள்கை வகுக்கப்பட வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட வேட்பாளர் குலரட்ணம் விக்னேஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழர்களின் அபிலாகைகளைத் தீர்க்க கூடிய வகையில் ஏனைய இனங்களுக்கு கிடைக்கின்ற அதே கௌரவமும் அதே சமனான நீதியும் கிடைக்க கூடிய வகையில் அரசியல் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதே என்னுடையதும் மற்றும் என் கட்சியினுடைய தீர்மானமும் ஆகும். யதமிழர் பிரதேசங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய இடங்களாக காணப்படுகின்றன.

நாங்கள் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையாமல் இருந்து வருகின்றமை எமது பிரதேசத்தில் கல்வி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றமைக்கு ஒரு காரணமாக அமையலாம்.

குறிப்பாக நான் ஒரு கல்வித்துறை சார்ந்தவன் என்கின்ற வகையில் தற்சமயம் குடும்பங்களில் நிலவும் பொருளாதார பிரச்சினைகள் மற்றும் மாணவர்களின் உடல், உள ரீதியான பாதிப்புக்களே அவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தடையாக உள்ளமையை என்னால் உணர முடிகின்றது.

க.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தர பரீட்சைகளின் முடிவுகள் வெளியாகும் போது வடபகுதி பத்திரிகைகளின் தலைப்பாக வடக்கினுடைய கல்வி நிலைமை வீழ்ச்சி என்கின்ற செய்தி காணப்படும் அதே நேரம் அடுத்த நாள் பத்திரிகையில் அரசியல் தலைமைகள் இது குறித்து வருத்தம் தெரிவிக்கின்றனர் என்கின்ற செய்தியையும் காணக்கூடியதாய் இருக்கின்றது.

உண்மையில் இந்த பிரச்சினையின் அடிப்படையைக் கண்டறிந்து அதற்குரிய தீர்வினை பெற்றுத்தாராமல் வெறும் கருத்துக்களை மட்டும் வெளியிடுவது எந்த ஒரு முன்னேற்றத்தையும் ஏற்படுத்த மாட்டது என்பதனை அவர்கள் உணர்வதில்லை.

என்னுடைய அவதானிப்பில் கல்வி வீழ்ச்சிக்குரிய முக்கியமான காரணங்களில் ஒன்று ஏற்கனவே குறிப்பிட்டது போல வடபகுதியின் பொருளாதார பின்னடைவாகும். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியின்மையே ஆகும்.

எங்கள் உழைப்பினூடாக பிரதேசத்திலே தன்னிறைவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே என்னுடைய திட்டமாகும். இதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனவே இவ்வாறான விடயங்களை உள்ளடக்கியதாக முதலில் ஓர் தொழிற்துறை அபிவிருத்தி மாற்றும் பொருளாதார வளர்ச்சியை எமது வடபகுதி காண வேண்டுமென்றால் உண்மையில் வடபகுதிக்கென பொருளாதாரக் கொள்கை ஒன்றினை வகுக்க வேண்டும்.

ஏனென்றால் நம் மண்ணிலே முதலிடுவதற்காக ஏராளமான முதலீட்டாளர்கள் காத்திருக்கின்றார்கள். இம் முதலீட்டாளர்களுக்கு ஏதுவானதொரு சூழல் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக எம் பிரதேசத்தில் இருக்கின்ற உள்ளூர் முதலீட்டாளர்கள் முக்கியப்படுத்தப்பட வேண்டும்.

அவர்களுக்குரிய ஊக்குவிப்புக்கள் கொடுக்கப்பட வேண்டும். அதேபோல் தேசிய ரீதியிலும் சர்வதேசரீதியிலும் எம் பிரதேசத்தில் முதலிட விரும்புவர்கள் இங்கு வந்து முதலிடக்கூடிய சூழலை உருவாக்கி கொடுக்க வேண்டும்.

நான் கட்சியினூடாக முன்வைத்திருக்கும் விடயம் வடக்கிற்குரிய பொருளாதார கொள்கை வகுக்கப்பட வேண்டும் என்பதாகும்.அந்த பொருளாதாரக் கொள்கையானது தேசிய பொருளாதாரக் கொள்கைக்கு வலுவூட்டுவதாகவும், வடக்கினுடைய தனித்துவம் மற்றும் வளங்களை பாதுகாப்பதாகவும், அவ்வளங்களினூடு உச்ச பயனை அடைவதாகவும் இருக்கவேண்டும் என்பதுமே எனது விருப்பமாகவும் திட்டமாகவும் உள்ளது. – என்றார்.

# கொரோனாவை நான் வெற்றி கொள்வேன்

**ஜனாதிபதி சூளுரை**

கொழும்பு, ஜுலை 15

கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைவதைக் கட்டுப்படுத்தி நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான சவாலை வெற்றி கொள்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள் ளார்.

வைரஸ் பரவலோடு உலகில் பெரும்பாலான நாடுகளுக்கு முன்னர் அதனை ஒழிப்பதற்கு பொறுப்புடைய அரசு என்ற வகையில் வெற்றிகரமாக நடவடிக்கை எடுத்தபோது வெவ்வேறு சவால்கள் எழுந்தபோதும் சிறந்த திட்டங்களுடன் அவை ஒவ்வொன்றையும் வெற்றி கொள்ள முடிந்தது என அவர் கூறினார்.

கொரோனா வைரஸை ஒழிப்பிற்காக விடே ஜனாதிபதி செயலணியுடன் நேற்று செவ்வாய்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் இவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தாலும் அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை கைவிடப் போவதில்லை என்றும், எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சவால்களுக்கும் முகங்கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு பி.சி.ஆர். பரிசோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு சமூகத்தில் பரவல் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

# வெடிபொருளை வெடிக்கச் செய்த குற்றச்சாட்டில் கைதானவர்களுக்கு மேலும் 14 நாள் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜுலை 15

கீரிமலை கூவில் பகுதியில் சட்டவிரோதமாக வெடிகுண்டினை வெடிக்கச் செய்த குற்றசாட்டில் கைது செய்யப்பட நான்கு பேரும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கீரிமலை கூவில் பகுதியில் காணி ஒன்றினை துப்புரவு செய்துகொண்டிருந்தபோது சிலரால் அவதானிக்கப்பட சிறிய ரக வீரியம் குறைந்த வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டது. அந்த வெடிகுண்டை பரீட்சித்து பார்க்க முயன்ற மூவர் அது வெடித்ததால் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு காயமடைந்த மூவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நால்வரையும் 48 மணிநேரம் விளக்கமறியலில் வைத்து விசாரிக்க உத்தரவிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றைய தினம் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் பிணை விண்ணப்பம் சந்தேகநபர்கள் சார்பில் கோரப்பட்டிருந்தது.

இந்த விண்ணப்பத்தை நீதிவான் நிராகரித்திருந்ததுடன், அபாயகரமான ஆயுதங்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நால்வரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைத்து விசாரிக்க உத்தரவிட்டதுடன், அந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகள் மற்றும் பிணை விண்ணப்பக் கோரிக்கைகள் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் உள்ள Tingering Work Shop இற்கு பெயின்ரிங் வேலைகள், ரிங்கறிங் வேலைகள், உதவியாளர்கள் தேவை.

076 622 4281 - தர்மிகன்
077 680 5923 / 076 905 9331 - ரட்ணம்

இல, 534 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

*office Assistant *Finance Manager
*Field Officer *English Teacher

A/L சித்தியடைந்த மற்றும் ஆங்கில அறிவுடையோர் விண்ணப்பிக்கலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தொடர்புகளுக்கு - 076 485 4092

யாழ் நகரில் இயங்கும் விடுதி ஒன்றுக்கு வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு - 077 538 0981

## பணிப் பெண்கள் தேவை

யாழ். மாவட்டத்திற்கு வீட்டுப் பணிப் பெண்கள், குழந்தைகள் பராமரிப்பாளர், நோயாளர்களை பராமரிப்பாளர்கள் மற்றும் தோட்ட வேலைகளுக்கு பெண்கள் தேவை.
தொடர்புகளுக்கு - 077 700 8016

## யாழ் நகரில் இயங்கும்

ஆய்வு கூடத்திற்கு வேலையாளர்கள் தேவை.

தாதிய உத்தியோகத்தர் - Nursing Staff - Phlebotomist)
அலுவலக சுத்திகரிப்பாளர் (Office Labour)

தொடர்புகளுக்கு - 077 325 7144
077 433 5079


# இலங்கை மற்றும் மாலைதீவுக்கான றோட்டறி ஆளுநராக அஜித் வீரசிங்க!

கொழும்பு, ஜுலை 15

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான றோட்டறி மாவட்டத்தின் புதிய ஆளுநராக நீர்கொழும்பு றோட்டறிக் கழகத்தின் முன்னை நாள் தலைவரும், இலங்கையின் முன்னணி தொழில் முயற்சியாளரும், தொழிலதிபருமான றொட்டேரியன் அஜித் வீரசிங்க பதவியேற்றிருக்கிறார். இதன் மூலம் இலங்கை மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்த 2 ஆயிரம் றோட்டறி அங்கத்தவர்களையும், 5 ஆயிரத்து 800 றோட்டறக்ட் உறுப்பினர்களையும், 6 ஆயிரத்து 200 பாடசாலை மாணவர்களான இன்ரக்ட் உறுப்பினர்களையும் தலைமையேற்று வழி நடத்தவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர உறுப்புரிமை கொண்ட ஒரேயொரு சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனமான றோட்டறி சர்வதேசத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான 73 கழகங்களைக் கொண்ட மாவட்டம் 3220 இன் புதிய ஆளுநராகவே அஜித் வீரசிங்க இம்மாதம் முதலாம் திகதி முதல் பதவியேற்றிருக்கிறார்.



சி.ஜ.சி நிறுவனத்தின் சி.ஐ.சி பீஃட்ஸ், சி.ஐ.சி வெட் கெயார், சி.ஐ.சி பண்ணைகள் மற்றும் சி.ஐ.சி பயோ செக்யூரிற்றி ப்ரீடர் பாம்ஸ் நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பதவி வகிக்கும் றொட்டேரியன் அஜித் வீரசிங்க, நீர்கொழும்பு மேரிஸ் ஸ்ரெல்லா கல்லூரியின் பழைய மாணவராவார்.

சமூக சேவையிலும், தன்னார்வத் தொண்டுப் பணிகளிலும் கடும் ஈடுபாடு கொண்டுள்ள இவர் ஸ்ரீலங்கா கிறிக்கெட் ஒழுக்காற்றுக் குழுவின் அங்கத்தவராகவும், கால்நடை மருத்துவப் பொருள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் பாடசாலைப் பழையமாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பதவிகளிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இலங்கையில் கொரோனாப் பெருந்தொற்றுக் காலப்பகுதியில், தொற்றை வெற்றிகரமாக எதிர் கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு றோட்டறி மாவட்டம் 3220 பெரும் பக்க பலமாக உதவிகளைச் செய்திருப்பதுடன், "Rotary Opens Opportunities' என்ற தொனிப் பொருளுடன் தனது தலைமையின் கீழ் கொரோனாப் பெருந்தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான செயற்றிட்டத்துக்கு மாவட்ட ஆளுநர் றொட்டேரியன் அஜித் வீரசிங்க முன்னுரிமை கொடுத்துச் செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 'தம்பி பிரபாகரன்' என்று விளிக்க தகுதியே அற்றவர் விக்னேஸ்வரன்

## விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை காட்டம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஜூலை15

**தானும் தமிழ்த் தலைவன் என காட்டுவதற்காக முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தம்பி பிரபாகரன் என்று கூறுகின்றார். உண்மையில் தம்பி பிரபாகரன் என கூறுவதற்கு விக்னேஸ்வரன் அருகதையற்றவர் என விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையின் பொதுச் செயலாளர் கண்ணன் தெரிவித்தார்.**

நேற்று யாழ் ஊடக மன்றத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ் மக்கள் தமது வாக்குகளை முன்னாள் போராளிகளாகிய எங்களுக்கு வழங்க வேண்டும். களத்தில் போராடிய போராளிகளுக்கு அரசியல் மேற்கொள்ளவும் தெரியும். அதனால் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளை நிராகரித்து எமக்கொரு சந்தர்ப்பத்தை தருங்கள்.




மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் முன்னாள் போராளிகளுக்கு இடம் தாருங்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் கோரியிருந்தோம். அதற்கு எதுவிதமான பதிலும் கூறவில்லை. ஆனால் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தேர்தலில் வேட்புமனுதாக்கல்செய்துவிட்டுமுன்னாள் போராளிகளை தங்களோடு ஒன்றிணையுமாறு கோருகின்றார். அனைத்து கட்சிகளும் முன்னாள் போராளிகளை கருவேப்பிலையாகப் பயன்படுத்துகின்றனர்.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் போராளிகளையும் மாவீரர்களையும் பற்றி தேர்தல் காலங்களில் மட்டுமே பேசுகின்றனர். எமது தேசத்திற்காக போராடிய போராளிகள்,

நம் மாவீரர்களைப் பற்றிக் கதைத்தால் நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அரசியல்வாதிகள் மாவீரர்களை பற்றிக் கதைப்பதை எவ்வாறு ஏற்றுக் கொள்வது. அவர்களுக்கு மாவீரர்களைப் பற்றி கதைப்பதற்கு என்ன தகுதி உள்ளது?

முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தற்போது 'தம்பி பிரபாகரன்' என்கின்ற வார்த்தை பிரயோகத்தை பயன்படுத்துகின்றார். அவர் முதலமைச்சராக இருந்து வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்த போது விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த போராளிகள் இராணுவத்தினரோடு இணைந்து செயற்படுகின்றனர் எனவும், அவர்களை மக்கள் மதிப்பதில்லை எனவும் கூறினார்.

பல போராளிகளின் வழக்குகளில் நீதியரசராக இருந்து போராளிகளுக்கு உச்சப்பட்ச தண்டனைகளை வழங்கிய நபர் 'தம்பி பிரபாகரன்' எனக் கூறுவதற்கு அருகதையற்றவர். தமிழர்களுக்காகத் தானும் உள்ளார், தானும் ஒரு தமிழ்த் தலைவன் என்பதை காட்டுவதறாகவே அந்த வார்த்தைப் பிரயோகங்களை முன்வைக்கிறார்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் மீளுருவாக்கம் என்ற போர்வையில் அன்மைக்காலமாக பலர் கைதுசெய்யப் படுகின்றனர். உண்மையில் தற்கால சூழலில் விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் என்பது சாத்தியமற்ற ஒன்று என்பது இலங்கை ஜனாதிபதிக்கும் இராணுவத் தளபதிகளுக்கும் தெரியும். வடக்கில் இராணுவத்தை நிலைகொள்ள வைப்பதற்காக பரப்பப்படும் ஒரு பொய் பிரச்சாரமே இதுவாகும்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். அதனை நாடாளுமன்றத்தில் உரத்துச் சொல்லக்கூடிய உரிமை எமக்கே உண்டு. சிறு குற்றம் செய்தால் கூட தமிழர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்கின்றார்கள். இதனை நிறுத்த வேண்டுமானால் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கப்பட வேண்டும்.

அரசியல் வித்துவான்கள் என கூறிக் கொண்டுதிரிபவர்கள் விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்க முன்வர வேண்டும். இது தனிப்பட்டவர்களின் பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்த தமிழர் களின் பிரச்சினை ஆகும். எனவே இதனை ஒற்றுமையாக மேற்கொள்ள வேண்டும். – என்றார்.

# சு.கவின் நீல நிறத்தை வேறு கட்சிகள் பயன்பமத்துவதைத் தமத்து நிறுத்துக!

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு தயாசிறி கடிதம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீல நிறத்தை வேறு கட்சிகள் பாவிப்பதைத் தடுப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட தினம் முதல் கட்சியின் நிறம் நீல நிறம் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன், கட்சியின் யாப்பு அங்கீகரிக்கப்பட்ட காலம்தொட்டு அதன் முதலாவது பந்தியில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. யாப்பின் முதலாவது பந்தியில், கட்சியின் பெயர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்றும், கட்சியின் தேர்தல் சின்னம் கை என்றும், கட்சியின் நிறம் நீல நிறம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எமது கட்சியின் யாப்பின் பிரதி ஒன்றை இதற்கு முன்னர் உங்களுக்கு அனுப்பியுள்ளோம்.

எனினும், இடம்பெறும் தேர்தல் பிரசாரங்களின் போது வேறு சில அரசியல் கட்சிகளினால், தங்கள் கட்சியின் நிறம், நீல நிறம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அண்மையில் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சி நீல நிறத்தைப் பாவிப்பதாக தேர்தல் மேடைகளில் அறிவித்திருக்கின்றது. இது தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் ஊடாக பிரசாரமாகி இருந்தது.

இந்த நடவடிக்கையானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால அடையாளத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாகும். அண்மையில் உருவாக்கப்பட்ட ஏனைய அரசியல் கட்சிகளினால் வேறு அரசியல் கட்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அவற்றின் நிறம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நீண்டகால வரலாறு இருப்பதுடன் அதன் நிறம் நீலம் என்றும் முழு நாட்டு மக்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அதனால் அதன் உரிமையை வேறு கட்சிகளுக்குப் பயன்படுத்துவதற்கு இடமளிப்பது மக்களின் ஜனநாயக ரீதியில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு இருக்கும் உரிமைக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

அதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறமான நீல நிறத்தை வேறு அரசியல் கட்சியினால் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கோ – தடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றுள்ளது.

## இதுவரை 3,040முறைப்பாடுகள்

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரையில் 3,040முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வன்முறை, தேர்தல் சட்டங்களை மீறல் போன்ற பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை, நேற்று முன்தினம் பிற்பகல் 04 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 114 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## இனி இது .......

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் தலைமையுடன் நெருங்கிப் பழகிய 'தொட்ட கடன், விட்ட கடன்' காரணமாக, முன்னாள் புலிப் போராளிகளை அரவணைக்க வேண்டிய கடப்பாடு தமக்கு இருக்கின்றது என்பதை உணர்ந்தமையால் சிவஞானம் முன்னெடுத்த காரியம்.

முன்னாள் போராளிகளை கூட்டமைப்புக்குள் ஒன்றிணைக்கும் வேலையை வேறு கூட்டமைப்பினர் எவருமே முன்னெடுக்கவில்லை.

இவ்விடயத்தில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கூட கருத்தியல் ரீதியாக அதனை வரவேற்றிருந்தாரே தவிர, தாமாக – சுயமாக – முன்னாள் போராளிகளை ஒன்றிணைத்து அரவணைக்க முன்முயற்சி நடவடிக்கை எதனையும் முன்னெடுக்கவில்லை.

இப்போது யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த முயற்சிகளை தாம் ஆரம்பித்திருக்கின்றார் என்கிறார் செல்வம்.

"Better late than never"என்பார்கள். அந்த வகையில் இதனை வரவேற்கலாம்.

தேர்தலுடன் இந்த முயற்சி – உறுதி மொழி – தூங்கி விடாமல் இருந்தால் சரி.

– மின்னல் –



# எனக்கு எதிராகப் பொய்ப் பிரசாரம்; ஓடி ஒழிய நான் ஒரு கோழை அல்லன்

## பொலனறுவையில் சீறினார் மைத்திரி

*பொலனறுவை, ஜூலை.15*

*முழு பொலனறுவை மாவட்டத்துக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றத்தை ஏற்படுத்திக்கொடுத்த எனக்கு எதிராக எனது ஊரைச் சேர்ந்த சில நபர்கள், பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளனர்.*



- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொலனறுவை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்தப் பொய்ப் பிரசாரங்களைக் கண்டு ஓடி ஒழிய நான் ஒரு கோழை அல்லன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஊரில் உள்ள பெரும்பான்மையானவர்கள் எனது பெறுமதியை அறிந்துள்ளனர். எனினும், சில நபர்கள், பொலனறுவையை மீள்நிர்மாணம் செய்த எனக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கூறி, ஊரில் உள்ள வாக்காளர்களின் மனதை மாற்ற முயற்சித்து வருகின்றனர் எனவும் அவர் விசனம் தெரிவித்தார்.

பொலனறுவையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் அறிமுகமான அமெரிக்கா, இந்தியா, சீனா உட்பட பல நாடுகளின் அரச தலைவர்கள் தொடர்ந்தும் என்னுடன் தனிப்பட்ட ரீதியில் நட்பாக இருந்து வருகின்றனர்.

நான் விரும்பும் எந்த நேரத்திலும் அந்த நாடுகளின் தலைவர்களைத் தொடர்புகொள்ள முடியும் அளவுக்கு உறவு வலுவாக உள்ளது. இப்படியான பெறுமதிமிக்க நபரின் பெறுமதியை பொலனறுவையை சேர்ந்த சிலர் மறந்து போயுள்ளனர்.

எனக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கூறும் நபர்கள் பொலனறுவைக்கு என்ன செய்தார்கள் என்று கேளுங்கள். ஊரைச் சேர்ந்தவனுடைய பெறுமதியை உணர்ந்துகொள்ளுங்கள் - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2020 இல் வெளியிடப்பெற்றது.